The Hindu (English)
Dated: 01.07.2024


# PIL plea challenges immunity given to Election Commission-allotted symbols

**Mohamed Imranullah S.**
CHENNAI

A public interest litigation petition has been filed in the Madras High Court challenging a 1975 amendment to the Representation of the People Act, 1951, whereby it was clarified that no symbol allotted to a candidate by the Election Commission of India (ECI) shall be considered to be a religious/national symbol.

The PIL petition has been listed for admission before the first Division Bench of Acting Chief Justice R. Mahadevan and Justice Mohammed Shaffiq on Monday. Advocate M.L. Ravi, of the Desiya Makkal Sakthi Katchi, had challenged the constitutional validity of a proviso introduced in 1975 to Section 123(3) of the 1951 Act.

In his affidavit, the petitioner stated that Section 123 lists bribery, undue influence, and use of religious/national symbols as corrupt electoral practices that could lead to the setting aside of the election of a candidate. However, the proviso to the Section excludes the ECI-allotted symbols from its ambit.



The petitioner said the objective of the introduction of Section 123(3) in 1961 was to curb communal and separatist tendencies among contestants in the electoral field. FILE PHOTO

The petitioner said that the proviso makes otiose the very purpose of Section 123(3), which declares as a corrupt practice the use of religious/national symbols for the furtherance of the prospects of a particular candidate or for prejudicially affecting the election of any other candidate.

He said that the objective of the introduction of Section 123 (3) in 1961 was to curb communal and separatist tendencies among contestants in the electoral field, and to widen the scope of the term, 'corrupt practice', as it had been defined in Section 123. However, it was watered down in 1975, he said.

The Election Symbols (Reservation and Allotment) Order, 1968, does not permit a political party to propose a symbol that has any religious/communal connotation or depicts any bird or animal. When such was the case, how could there be an immunity for the symbols allotted by the ECI, the litigant asked.

The Times of India

Dated: 01-07-2024

## Change Vikravandi returning officer: Anbumani to ECI

PMK president Anbumani Ramadoss on Sunday demanded the Election Commission of India to change the returning officer of Vikravandi bypoll. In a statement, Anbumani said "Nine DMK ministers and more than 80 MLAs are camping in Vikravandi for the bypoll. DMK men are supplying liquor to voters," Anbumani alleged. "The DMK cadres are violating model code of conduct rules but the Villupuram district officials and cops are protecting them. When PMK and AIADMK cadres questioned the DMK cadres, they were attacked," he alleged.

Deccan Chronicle

Dated: 01-07-2024

# Appoint non-TN cadre IAS official as RO: PMK

**Chennai, June 30:** Pattali Makkal Katchi on Sunday urged the Election Commission to appoint an IAS officer from outside of Tamil Nadu as the Returning Officer (RO) for the July 10 bypoll to the Vikravandi Assembly constituency.

Alleging blatant violation of rules by the governing DMK and assault on PMK and AIADMK functionaries by a ruling party office-bearer, PMK chief Anbumani Ramadoss appealed to the poll body to replace the incumbent RO, M Chandrasekar (a state government official) with an IAS official belonging to some other state to ensure, 'at least to some extent,' fair conduct of election.

Additionally, five observers should be appointed and action should be taken on all the complaints against those belonging to the DMK for violation of rules, Anbumani said in a statement.

The PMK president alleged that 'thousands' of DMK workers are camping in Vikravandi, which includes ministers and over 80 MLAs who are campaigning in the constituency using 'cars in thousands,' which is a violation. Such cars should be seized. However, rather than doing that, Villupuram district police and officials are providing protection. *—PTI*

The Hindu (Tamil)

Dated: 01.07.2024

ஸ்ரீபெரும்புதூர் மக்களவை தொகுதி

# வேட்பாளர்களின் செலவு கணக்கை தேர்தல் பார்வையாளர்கள் ஆய்வு

● செங்கல்பட்டு

ஸ்ரீபெரும்புதூர் மக்களவைத் தொகுதியில் போட்டியிட்ட, 31 வேட்பாளர்களும், தங்களது தேர்தல் செலவு கணக்கை நேற்று சமர்ப்பித்தனர். அவற்றை தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் ஒத்திசைவு செய்தனர்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று ஸ்ரீபெரும்புதூர் மக்களவைத் தொகுதியின் தேர்தல் செலவு கணக்குகள் இறுதி ஒத்திசைவு கூட்டம் மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ் மற்றும் தேர்தல் செலவினப் பார்வையாளர் சந்தோஷ் சரண் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தேர்தல் செலவினக் கணக்குகள் முடிக்கப்பட வேண்டும்.

ஸ்ரீபெரும்புதூரில் மொத்தம் 31 பேர் வேட்பாளர்களாகப் போட்டியிட்டனர். இந்நிலையில் வேட்பாளர்களின் தேர்தல் கணக்குகள் இறுதி ஒத்திசைவு கூட்டத்தில் வேட்பாளர்கள் கலந்துகொண்டு தங்களது இறுதி தேர்தல் கணக்குகளை உரிய படிவங்களில் ஒப்படைத்தனர். இன்னும் 2 நாட்களுக்குள் செலவு கணக்கு விவரங்கள், தேர்தல் ஆணைய இணைய தளத்தில் வெளியிடப்படும் என, தேர்தல் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) வே.நாகலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) சுப்பிரமணி, உதவி தேர்தல் பணியாளர்கள் குழுவினர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Election observers scrutinize the candidate's Expenditure Account in Sriperumbudur Lok Sabha constituency

Daily Thanthi

Dated: 01-07-2024

# விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் அதிகாரியை மாற்ற வேண்டும்

## அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை.1-



விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் அதிகாரியை மாற்ற வேண்டும் என டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

### அ.தி.மு.க., பா.ம.க.வினர் மீது தாக்குதல்

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலுக்கு தி.மு.க.வின் 9 அமைச்சர்கள் பொறுப்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு துணையாக மற்ற அமைச்சர்களும், 80-க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.கள், பல்லாயிரக்கணக்கான உள்ளாட்சிப் பிரதிநிதிகள் விக்கிரவாண்டியில் குவிந்துள்ளனர். அவர்கள் அனைவரும் வலம் வரும் கார்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட வேண்டும். விக்கிரவாண்டி தொகுதி முழுவதும் கோவில் நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றை ஆக்கிரமிப்பு செய்து தி.மு.க.வினர் கூடாரங்கள் அமைத்துள்ளனர். இத்தகைய கூடாரம் அமைப்பதற்காக ஆசூர் கிராமத்தில் தி.மு.க. கிளைச் செயலாளர் கண்ணதாசன் என்பவர் சட்டவிரோதமாக மணல் எடுத்துள்ளதாக கூறப்படுகிறது. அதுபற்றி அதிகாரிகளிடம் புகார் செய்த அப்பகுதி அ.தி.மு.க. கிளைச் செயலாளர் கந்தன் என்பவரை கண்ணதாசன் கொடிய ஆயுதங்களால் தாக்கியுள்ளார். அதைத் தட்டிக்கேட்ட பா.ம.க. கிளைத் தலைவர் அண்ணாதுரையும் கொடூரமாக தாக்கப்பட்டுள்ளார். இருவரும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### தேர்தல் அதிகாரியை மாற்ற வேண்டும்

தி.மு.க.வின் அத்துமீறல்களை தடுக்க வேண்டிய போலீஸ் துறையும், தேர்தல் அதிகாரியும் அவர்களுக்கு துணை போவது கண்டிக்கத்தக்கது.

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் ஓரளவாவது நியாயமாக நடைபெற வேண்டும் என்றால், தேர்தல் அதிகாரி சந்திரசேகரை அந்தப் பணியில் இருந்து உடனடியாக விடுவித்துவிட்டு வெளி மாநில ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை தேர்தல் அதிகாரியாக நியமிக்க வேண்டும். தேர்தல் விதிமீறல்களை தடுப்பதற்காக ஒன்றியத்திற்கு 2 பார்வையாளர்கள், விக்கிரவாண்டி பேரூருக்கு ஒரு பார்வையாளர் என மொத்தம் 5 பார்வையாளர்களை கூடுதலாக நியமிக்க வேண்டும்.

தி.மு.க.வினரின் தேர்தல் விதிமீறல்கள் குறித்து இதுவரை பா.ம.க. சார்பில் அளிக்கப்பட்ட அனைத்து புகார்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.


இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Thiru. Anbumani Ramadoss emphasis that in Vikravandi constituency Election officer should be changed.

Daily Thanthi

Dated: 01-07-2024

# தீவிர வாகன சோதனை



விக்கிரவாண்டி இடைத்தேர்தலையொட்டி அரசியல் கட்சியினர், பணம் பட்டுவாடா செய்வதை முற்றிலும் தடுக்கும் வகையில் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. விழுப்புரம் மாவட்ட எல்லையான மழவந்தாங்கலில் தேர்தல் பறக்கும் படையினருடன் துணை ராணுவ வீரர்கள் இணைந்து தீவிர வாகன சோதனை நடத்தியபோது எடுத்த படம்.

Intensive vehicle raid in Vikravandi constituency

Dinamalar

Dated: 01.07.2024

# 'விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் அதிகாரியை மாற்றணும்'

சென்னை, ஜூலை 1–

பா.ம.க., தலைவர் அன்புமணி அறிக்கை:

விக்கிரவாண்டி சட்ட சபை தொகுதி இடைத் தேர்தலுக்கு இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில், தேர்தல் விதிமீறல்கள் மற்றும் வன்முறைகளை தி.மு.க., கட்டவிழ்த்து விட்டுள்ளது.

தி.மு.க., தேர்தல் பணிகளுக்கு, ஒன்பது அமைச்சர்கள் பொறுப்பாளர்களாக உள்ளனர். அவர்களுக்கு துணையாக மற்ற அமைச்சர்களும், 80க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.,க்கள், ஆயிரக்கணக்கான உள்ளாட்சி பிரதிநிதிகளும் விக்கிரவாண்டியில் குவிந்துள்ளனர்.

அவர்கள், நூற்றுக்கணக்கான வாகனங்களில் தொகுதியில் வலம் வருகின்றனர். இது அப்பட்டமான விதிமீறல் என்பதால், அவர்கள் செல்லும் வாகனங்களை பறிமுதல் செய்ய வேண்டும்.

தி.மு.க., கிளைச் செயலர் கண்ணதாசன், சட்டவிரோதமாக மணல் எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதுபற்றி அதிகாரிகளிடம் புகார் செய்த அ.தி.மு.க., கிளைச் செயலர் கந்தனை ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

அதை தட்டிக் கேட்ட பா.ம.க., கிளைத் தலைவர் அண்ணாதுரையும் தாக்கப்பட்டுள்ளார். இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக, போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதை, தேர்தல் அதிகாரியும் வேடிக்கை பார்க்கிறார்; அவரை மாற்றி, வேறு அதிகாரியை நியமித்து தேர்தலை நியாயமாக நடத்த வேண்டும்.

இவ்வாறு அன்புமணி கூறியுள்ளார்.

Thiru. Anbumani Ramadoss emphasis that in Vikravandi constituency. Election officer should be changed.